<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2022–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8–ம் நாள் திங்கள் கிழமை

<u>இடைநிலை மனுஎண்.3/2021</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.173/2019</u>

(பழைய அசல் வழக்கு எண்.560/2010)

ஜெய்னுலாபுதீன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம்
2. வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர்
3. வட்டாட்சியர், வேப்பந்தட்டை, ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 06.07.2022–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி. சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ள ஆவணத்தை தன் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டும் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) மனுதாரர் இவ்வழக்கில் வாதியாவார் என்றும், வழக்குச் சொத்து தனது தாய்க்கு மஹர் கொடையாக வழங்கப்பட்டு, தனது தாயாரிடம் இருந்து 28.12.1987 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் தனக்கு பாத்தியப்பட்டது என்றும், பின்னிட்டு 1995 ம்

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:24:37 +0530

வருடம் தான் கடன் பெற்று வழக்குச் சொத்தில் 2 மாடிக்கட்டிடத்தை கட்டியுள்ளதாகவும், பின்னிட்டு தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக வேண்டி வழக்குச் சொத்தின் சில பகுதிகள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன என்றும், அவ்வாறு எடுக்கப்பட்டது போக எஞ்சிய சொத்து தன் பெயரில் இருந்து வருகிறது என்றும், 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரரின் சொத்திற்கு மேற்கே அமைந்த சொத்தை 25.03.1983ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் பெற்றார் என்றும், அவரது மேற்படி கிரைய ஆவணத்தில் அவரது சொத்திற்கு கிழக்கே அமைந்துள்ள சொத்து வழக்குச் சொத்து என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி 4ம் எதிர்மனுதாரர், அவரது சொத்தில் எவ்வித காலி இடமும் இல்லாமல் கட்டிடம் கட்டிவிட்டார் என்றும், தான் கட்டிடம் கட்ட ஆரம்பித்த போது வண்டிப்பாதையில் நான் கட்டிடம் கட்டுவதாக சொல்லி தவறாக தடுத்து வருகிறார் என்றும், மேற்படி சங்கதிகளை ஒப்புக்கொண்ட வகையில் தானும், 4ம் பிரதிவாதியும் 06.01.1994ம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றும், அந்த ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றும், இருப்பினும் தன் தரப்பு வழக்கை நிரூபிக்க மேற்படி ஆவணத்தை தன் தரப்பில் குறியீடு செய்ய வேண்டும் என்று கோரி இம்மனுவுடன் மேற்படி ஒப்பந்த பத்திரத்தையும் சேர்த்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

3) மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்தும், மனுவில் கூறியுள்ள 06.01.1994ம் தேதியிட்ட மனுதாரரும், 4ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்டதாக சொல்லப்படும் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், 4ம் எதிர்மனுதாரர் ஒரு போதும் அவ்வாறான எந்த ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை என்றும், மனுவில் குறியீடு செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ள ஆவணம் பதிவு சட்டத்தின் பிரிவு 17(1)(b)–ன் உட்கூறுகளின் படி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், எனவே மேற்படி சட்டத்தின் பிரிவு 49–ன் கீழ் ஆவணம் சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியம் இல்லை என்பதாலும்ம் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:24:54 +0530

4) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

6) இருதரப்பிலும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர் தாவா சொத்து பொருத்து தனக்குள்ள உரிமையை விளம்புகை செய்யவும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதும், அசல் வழக்கு கடந்த 27.01.2021 ம் தேதி மனுதாரர் தரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டுள்ளதும், அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 மற்றும் நீ.ம.சா.1 முதல் நீ.ம.சா.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதும், பின்னிட்டு வா.சா.1 ஐ முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வாய்தா அளித்துள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுவில் மனுதாரர் கோரியுள்ள படி பதிவு செய்யப்படாத ஆவணத்தை குறியீடு செய்ய முடியுமா என்பதை ஆராய்கையில் மனுவில் கண்டுள்ள ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும் கூட அதனை Collateral Purpose–க்காக குறியீடு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளதை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் பதிவு செய்யப்படாத ஆவணம் குறியீடு செய்யப்படக்கூடாது என்றும், அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளதை ஆராய்கையில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்ற காரணத்தினாலேயே ஒரு ஆவணம் குறியீடு செய்யப்படக் கூடாது என்று எந்த சட்ட விதியும் கூறாத பட்சத்தில் மாண்புமிகு உயர் நீதிமன்றம் Solai Vs. Periyakaurppan C.R.P. (MD) (PD) No.2227 of 2013, date: 25.09.2014 என்ற வழக்கில் 10 வது பத்தியில் "From the various Judgement relied on by the parties, an unregistered, unstamped document can be marked and relied on by the party for collateral purpose. It is also well settled that the Courts must mark an unregistered, unstamped document subject to the objection by the opposite party. The Courts should not shut down the evidence at the threshold

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:25:10 +0530

itself. At the time of final decision only, the Courts must consider the evidence based on the document and objections by the opposite party. If the Courts come to the conclusion that the objection with regard to document is sustainable, then the said document and evidence based on the said document must be rejected. The learned Judge committed irregularity by rejecting the markin of documents at the threshold itself. The learned Judge ought to have marked the documents subject to the objections as per will settled law." என்று கூறியுள்ளது.

8) மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ஆவணங்களை குறியீடு செய்வது குறித்து Bipin Shantilal Panchal Vs. State of Gujaraj and another (AIR 2001 SC 1158) என்ற வழக்கில் 12 மற்றும் 13 ம் பத்தியில் "It is an archaic practice that during the evidence collecting stage, whenever any objection is raised regarding admissibility of any material in evidence the Court does not proceed further without passing order on such objection. But the fallout of the above practicce is this: Suppose the trial court, in a case, upholds a particular objection and excludes the material from being admitted in evidence and then proceeds with the trial and disposes of the case finally." என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டு ஆராய்கையில் மனுதாரர் மேற்படி ஆவணத்தை Collateral purpose–க்காக மட்டுமே குறியீடு செய்ய வேண்டுகிறார் என்ற நிலையிலும், மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை தள்ளுபடி செய்ய தகுந்த காரணங்கள் கூறப்படவில்லை என்றும், இம்மனுவில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணமாக இருந்த போதிலும், அதனை வழக்கின் தற்போதைய நிலையில் குறியீடு செய்து கொள்வது ஏற்புடையது என்றும், அதே நேரத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணம் தொடர்பாக எடுத்துரைக்கப்படும் ஆட்சேபணைகளுடன் குறியீடு செய்யப்பட்டு வழக்கின் முடிவில் ஆவணத்தின் ஏற்புடையத்தன்மை, சாட்சியத்தன்மை ஆகியவை முடிவு செய்து கொள்ளப்படும் என்றும், மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதி மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:25:27 +0530

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:25:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2022.08.08 17:25:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.